மில்களுக்குச் சரிசமமாகக் கொண்டுவரவேண்டும் என்று விரும்பினார்கள். ஏறக்குறைய நான்கில் மூன்று பங்கு கூட்டுறவு மில்களில், மற்ற ஆலைகளில் தரப்படும் கூலி அளவுக்குக் கூலி தர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக, அநேகமாக கூட்டுறவு ஆலைகளில் வேலை செய்பவர்களுக்கும் தனியார் ஆலைகளில் வேலை செய்பவர்களுக்கும் கூலியில் எந்த விதமான வித்தியாசமும் இல்லாத சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இருக்கும் தொழிலாளர்கள் அத்தனை பேரும் மிகவும் நிம்மதியாக இருக்கிறார்கள்.

Centre-State relations

* 624 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether this Government have sent any communication to the Centre during 1973 to take steps to amend the Constitution so as to secure autonomy for the States; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) மத்திய-மாநில உறவு குறித்து, இந்திய அரசால் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு செய்த பரிவுரைகள் பற்றி இம் மாநில அரசின் கருத்துக்களை இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் தனது 21-8-1971-ஆம் நாளிட்ட கடிதத்தில் கேட்டுள்ளது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிவுரைகளை மத்திய-மாநில உறவு குறித்து இந்த அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட டாக்டர் பி. வி. ராஜமன்னார் தலைமையிலான மத்திய-மாநில உறவு ஆய்வுக்குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில் இந்த அரசு ஆய்வு செய்தது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு செய்துள்ள இருபத்திரண்டு பரிவுரைகளில் நான்கு பரிவுரைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஏனைய பரிவுரைகளைப் பொறுத்தவரை, இந்த அரசு தனது கருத்துக்களைத் தந்துள்ளதோடு, அவை தொடர்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்கள் பற்றியும் கருத்துரை

1974 மார்ச் 27]

வழங்கியுள்ளது. இந்த அரசின் கருத்துக்கள், இம்மாநில சட்டத்துறையின் 4-7-1973-ஆம் நாளிட்ட 22451/71-13-ஆம் எண் கடிதத்தில் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

* 625 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government of India have expressed their views on the Rajamannar Committee Report?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இராஜமன்னர் குழு அறிக்கையைப்பற்றி இந்திய அரசின் கருத்துக்கள் இவ்வரசுக்கு வரவில்லை.

* 626 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய மாநில உறவு குறித்து ஏனைய முதலமைச்சர்களின் கருத்து கேட்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மைய-மாநில உறவுகள் குறித்துத் தங்களது கருத்துக்களை அளிக்குமாறு இம்மாநில அரசு ஏனைய மாநில முதலமைச்சர்களுக்கு குறிப்பாக வேண்டுகோள் ஏதும் விடுக்கவில்லை. ஆனாலும் மைய-மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கையின் பிரதிநிதிகளுடன் அனுப்பப்பட்ட கடிதத்தில் அவ்வறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துகள் பற்றிச் சிந்தித்துப் பார்க்குமாறு சிறிது அவகாசம் எடுத்துக்கொள்ளுமாறு முதலமைச்சர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

திரு. என். கே. பழனிசாமி: இந்தச் சபையில் அடிக்கடி அறிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்படி, மத்திய சர்க்கார் நம்முடைய திட்டங்களுக்குத் தடையாக இருப்பதாகச் சொல்வதுபற்றி, நாம் மத்திய சர்க்காரோடு நேரிடையாகப் பேசி விவாதித்தே தீர்த்துக் கொள்ளலாம். அப்படி இருக்கிறபோது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 256-ஆவது பிரிவை ரத்து செய்வதன் மூலம் பார்லிமெண்டுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை ரத்து செய்து, மாநிலத்தில் சுயாட்சி என்றும், மத்தியில் கூட்டாட்சி என்றும் மத்திய சர்க்காரைப் பலவீனமுடையதாகச் செய்வதனால் என்ன பிரயோசனம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய மாநில உறவுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்வதற்கு ராஜமன்னர் குழு போட்டதே குற்றம் என்றால் மத்திய அரசு